





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# அடைக்கலப்பத்து

*adaikkalappaththu*

# அடைக்கலப்பத்து

தனியன்

**ஸ்ரீ ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ச்வாமிகள் அருளிச்செய்த**

रामानुज दयापात्रं ज्ञान वैराग्य भूषणम् ।

श्रीमद् वेङ्कटनाथार्यं वन्दे वेदान्त देशिकम् ॥

**ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்த**

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்
ஓரொன்று தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

**ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த**

***பத்தி முதலாம் அவற்றில்***
***பதி எனக்கு கூடாமல்***
***எத்திசையும் உழன்றோடி***
***இளைத்து விழும் காகம் போல்***
***முத்தி தரும் நகரேழில்***
***முக்கியமாம் கச்சி தன்னில்***
***அத்திகிரி அருளாளர்க்கு***
***அடைக்கலம் நான் புகுந்தேனே*** [1]

சடைமுடியன் சதுர்முகம் என்று
இவர் முதலாம் தரம் எல்லாம்
அடைய வினைப்பயனாகி
அழிந்து விடும் படி கண்டு
கடி மலராள் பிரியாத
கச்சி நகர் அத்திகிரி
இடமுடைய அருளாளர்
இணையடிகள் அடைந்தேனே [2]

# அடைக்கலப்பத்து

தந்திரங்கள் வேறின்றி
        தமது வழி அழியாது
மந்திரங்கள் தம்மாலும்
        மற்றுமுள்ள உரையாலும்
அந்தரம் கண்டு அடி பணிவார்
        அனை வருக்கும் அருள் புரியும்
சிந்துர வெற்பிறையவனார்
        சீலம் அல்லது அறியேனே [3]

காகம் இராக்கதன் மன்னர்
        காதலி கத்திரபந்து
நாகம் அரன் அயன் முதலா
        நாகநகரார் தமக்கும்
போகமுயர் வீடுபெற
        பொன்னருள் செய்தமை கண்டு
நாகமலை நாயகனார்
        நல்லடிப்போது அடைந்தேனே [4]

உகக்கும் அவை உகந்து
        உகவா அனைத்தும் ஒழிந்து
உறவு குணம் மிகத் துணிவு பெற உணர்ந்து
        வியன் காவலென வரித்து
சகத்தில் ஒரு புகலில்லா
        தவம் அறியேன் மதிட்கச்சி
நகர்க் கருணை நாதனை
        நல்லடைக்கலமாய் அடைந்தேனே [5]

அளவுடையார் அடைந்தார்க்கும்
        அதன் உரையே கொண்டவர்க்கும்
வளவுரை தந்தவன் அருளே
        மன்னிய மாதவத்தோர்க்கும்
களவொழிவார் எமரென்ன
        இசைந்தவர்க்கும் காவலராம்
துளவ முடி அருள் வரதர்
        துவக்கிலெனை வைத்தேனே [6]

# அடைக்கலப்பத்து

உமதடிகள் அடைகின்றேன் என்று
ஒரு கால் உரைத்தவரை
அமையுமினி என்பவர் போல்
அஞ்சலென கரம் வைத்து
தமது அனைத்தும் அவர் தமக்கு
வழங்கியும் தாம் மிக விளங்கும்
அமைவுடைய அருளாளர்
அடியிணையை அடைந்தேனே [7]

திண்மை குறையாமைக்கும்
நிறைகைக்கும் தீவினையால்
உண்மை மறவாமைக்கும்
உளமதியில் உகக்கைக்கும்
தண்மை கழியாமைக்கும்
தரிக்கைக்கும் தணிகைக்கும்
வண்மையுடைய அருளாளர்
வாசகங்கள் மறவேனே [8]

சுரிதிநினை இவையறியும்
துணிவுடையார் தூமொழிகள்
பரிதிமதி ஆசிரியர்
பாசுரம் சேர்ந்தருக்கணங்கள்
கருதியொரு தெளிவாளால்
கலக்கம் அறுத்த அத்திகிரி
பரிதிமதி நயனமுடை
பரமன் அடி பணிந்தேனே [9]

*திருமகளும் திருவடிவும் - திருவருளும் தெள்ளறிவும்*
*அருமை இலாமையும் உறவும் - அளப்பரிய வடியரசும்*
*கருமம் அழிப்பளிப்பு அமைப்பும் - கலக்கமிலா வகை நின்ற*
*அருள் வரதர் நிலை இலக்கில் - அம்பென நான் அமிழ்ந்தேனே* [10]

*ஆறு பயன் வேறில்லா - அடியவர்கள் அனைவர்க்கும்*
*ஆறும் அதன் பயனும் இவை - ஒருகாலும் பலகாலும்*
*ஆறு பயன் எனவே கண்டு - அருளாளர் அடியிணைமேல்*
*கூறிய நற்குண உரைகள் - இவை பத்தும் கோதிலவே* [11]